செய்தி வெளியீடு எண்:331 நாள்: 26.06.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மண்டலத்தில் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு கொரோனா நோய்த் தொற்று பரிசோதனை முகாம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.

சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு லட்சுமி மஹாலில் இன்று (26.06.2021) நடைபெற்ற நிகழ்ச்சியில்,மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் சென்னை மண்டலத்தில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்குமான இலவச கொரோனா நோய்த் தொற்று பரிசோதனை முகாமைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கொரோனா நோய்த் தொற்று குறைவாக உள்ள சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 28.06.2021 முதல் நிலையான வழிகாட்டி முறைகளை பின்பற்றி வழிபாட்டுத் தலங்கள் திறக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, திருக்கோயில்களைத் திறக்க ஏதுவாகத் திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமைக்குள் கொரோனா நோய்த் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்படும். திருக்கோயில்களைத் தூய்மையான முறையில் பராமரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப., எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பரந்தாமன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஹரிபிரியா, பகுதி செயலாளர் திரு.பழனி ஆகியோர் செய்திருந்தார்கள்,

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9